செய்தி மக்கள் தொடர்பு துறை

செய்தி வெளியீடு எண் : 18 நாள் : 10-1-2018

# தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை மாசற்ற பொங்கலாக மகிழ்ச்சியுடன் கொண்டாடிட பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்

தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளுக்கு முதல் நாள் நாம் "போகிப்பண்டிகையை" கொண்டாடுகிறோம். இந்நாளில் சில பழைய பொருட்களை எரிப்பதென்பது "பழையன கழிதல்" என்ற வழக்கத்திற்கான அடையாளமாகும். இந்நாளில் கிழிந்த பாய்கள், பழைய துணிகள், தேய்ந்த துடைப்பான்கள், தேவையற்ற விவசாய கழிவுகள் ஆகியவற்றைத் தீயிட்டு கொளுத்துவார்கள். பெரும்பாலும் நமது கிராமங்களில் கடைபிடிக்கப்படும் இப்பழக்கம் சுற்றுச் சூழலுக்கு பெரும் தீமையை ஏற்படுத்தாத ஒன்றாகும். ஆனால், தற்சமயம் போகியன்று மக்கள் நெருக்கம் மிகுந்த நகரங்களில் டயர், ரப்பர், பிளாஸ்டிக் மற்றும் செயற்கை பொருட்களை எரிக்கையில் நச்சுப் புகை மூட்டம் ஏற்பட்டு மக்களுக்கு சுவாச நோய்கள், இருமல் மற்றும் நுரையீரல், கண், மூக்கு எரிச்சல் உட்பட பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகின்றன. நச்சுக்காற்றாலும், கரிப்புகையாலும் காற்று மாசுபட்டு நம் நகரம் கருப்பு நகரமாக மாறுகிறது. நச்சுப்புகை கலந்த பனி மூட்டத்தால் சாலை போக்குவரத்திற்கு தடை ஏற்படுகிறது. இது போன்ற செயல்கள் மூலம் காற்றை மாசுபடுத்துவது சட்டப்படி குற்றமாகும். மேலும் பழைய மரம், வறட்டி தவிர வேறு எதையும் எரிப்பதற்கு உயர்நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. இதனை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

போகிப்பண்டிகை நமக்கு இனிய ஆரம்பமாக இருக்கட்டும். அன்றைய தினம் குப்பையை முறைப்படி ஒழித்து, பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடனும், மாசு இல்லாமலும் கொண்டாடுவதற்கு முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்.